සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

0272

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

மாகாண அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (வட மத்திய / சப்பிரகமுவ)

Open Competitive Examination for Recruitment to Class III of Provincial Public Management Assistants' Service - 2013 (North Central / Sabaragamuwa)

(01) மொழித்திறன்
Language Proficiency

ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள்
One hour and Thirty minutes

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்

மிக முக்கியம் :

விடை எழுதுவதற்குப் பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



* **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.**

1 2 3 4

முக்கியம் :

* இவ்வினாத்தாள் **இரு** பகுதிகளைக் கொண்டுள்ளது. I ஆவது பகுதி **45** வினாக்களைக் கொண்டுள்ளதுடன் II ஆவது பகுதி **2** வினாக்களைக் கொண்டுள்ளது.

* **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

* இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **ஒரு மணித்தியாலம் முப்பது** நிமிடங்கள் ஆகும்.

* மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

* ***உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டா.***

* விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

* **கறுப்பு** அல்லது **நீல நிறப்** பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

* இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.

* ***தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டா.***

உமது சுட்டெண்ணை இங்கே எழுதுக.

.....

சுட்டெண்

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.....

நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

பகுதி	பக்க எண்	வினா எண்	பெற்ற புள்ளிகள்
I	2	1 - 20	
	3	21 - 40	
	4	41 - 45	
II	4	1(i - viii)	
	5 6	2	
மொத்தம்			

இறுதிப் புள்ளிகள்

இலக்கத்தில்	
எழுத்தில்	

விடைத்தாள்களைப் பரீட்சித்தவர்	
புள்ளிகளைப் பரீட்சித்தவர்	

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki

பகுதி I

● **1** தொடக்கம் **10** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொல்வரிசை ஒவ்வொன்றிலும் **சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லைத்** தெரிவு செய்து, **அதற்குரிய இலக்கத்தினை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. (1) தகமை (2) பகைமை (3) நிலமை (4) கையமை (.....)
2. (1) சமர்பணம் (2) புனருத்தாரனம் (3) அங்குரார்ப்பணம் (4) நிவாரனம் (.....)
3. (1) பிரச்சினை (2) நிட்சயம் (3) மேற்க்கோள் (4) ஆராட்சி (.....)
4. (1) பாராழுமன்றம் (2) நிருவனம் (3) தினைக்களம் (4) பல்கலைக்கழகம் (.....)
5. (1) தாள்வாரம் (2) சுகவீனம் (3) துறப்புக்கோவை (4) மேன்பாடு (.....)
6. (1) தவிசாளர் (2) உருப்பினர் (3) செயலாலர் (4) முகாமையாலர் (.....)
7. (1) காச்சல் (2) நீரழிவு (3) குறுதிச்சோகை (4) மஞ்சட்காமாலை (.....)
8. (1) செலவாணி (2) நாகரீகம் (3) அழைப்பாணை (4) வர்த்தமாணி (.....)
9. (1) வாழ்கை (2) சர்ச்சை (3) யதார்தம் (4) கைநூல் (.....)
10. (1) தீர்க்கதரசி (2) கலைக்கழஞ்சியம் (3) புடைவை (4) உபநியாசம் (.....)

(10 புள்ளிகள்)

● **11** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொல் வரிசை ஒவ்வொன்றிலும் **பொருத்தமற்ற** சொல்லைத் தெரிவு செய்து அதற்குரிய **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

11. (1) கமலம் (2) பங்கயம் (3) தாமரை (4) மல்லிகை (.....)
12. (1) ஞாலம் (2) காசினி (3) விசும்பு (4) மேதினி (.....)
13. (1) கவின் (2) பரிவு (3) அழகு (4) எழில் (.....)
14. (1) ஏடு (2) கவி (3) பனுவல் (4) நூல் (.....)
15. (1) இகழ்தல் (2) எள்ளல் (3) அரற்றல் (4) நிந்தித்தல் (.....)
16. (1) விதப்புரை (2) பரிந்துரை (3) சிபாரிசு (4) விமர்சனம் (.....)
17. (1) நோன்பு (2) உபவாசம் (3) சஞ்சீவி (4) விரதம் (.....)
18. (1) ஈடேற்றம் (2) இலக்கு (3) குறிக்கோள் (4) இலட்சியம் (.....)
19. (1) களங்கம் (2) ஊழல் (3) கறை (4) குற்றம் (.....)
20. (1) ஒளி (2) விழி (3) நயனம் (4) நேத்திரம் (.....)

(10 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

● **21** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய **எதிர்கருத்துச் சொற்களை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

21. இணக்கம் (.....)

22. ஆரோகணம் (.....)

23. புராதனம் (.....)

24. மங்கலம் (.....)

25. கனிஷ்ட (.....)

26. உபசாரம் (.....)

27. தவப்பொழுது (.....)

28. மருள் (.....)

29. ஞானம் (.....)

30. சரீரி (.....)

(10 புள்ளிகள்)

● **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான **தனிச்சொல்லை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

31. வீண் செலவைத் தவிர்த்து பொருளைச் செட்டாகச் செலவு செய்வது (.....)

32. வயலும் வயல் சார்ந்த இடமும் (.....)

33. இளைப்பாறிய உத்தியோகத்தர் ஒருவருக்கு அவரது கடந்தகாலச் சேவைக்காக மாதாந்தம் கொடுக்கப்படும் பணம் (.....)

34. பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகள் சுதந்திரம் பெற்றதன் பின்னர் பிரித்தானியாவுடன் இணைந்து ஏற்படுத்திக் கொண்ட அமைப்பு (.....)

35. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா (.....)

(05 புள்ளிகள்)

● **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் **பொருத்தமான சொல்லை** அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து **இடைவெளியில்** எழுதிப் பூர்த்தி செய்க.

36. பாடசாலையில் இடம் பெற்ற கலாசார விழாவிற்குப் பல பிரமுகர்கள் .....
(சமூகமளித்திருந்தனர் / சமுகமளித்திருந்தனர்)

37. வீடுகள் பல ..... மூழ்கின. (வெள்ளத்தில் / வெள்ளத்தினால்)

38. ஒவ்வொரு .....குறைந்தது பத்து வருடங்களுக்கு ஒரு முறையாவது குடித்தொகை மதிப்பீடு நடைபெறுவதுண்டு. (நாட்டிலும் / நாடுகளிலும்)

39. நீ அழைத்ததற்காக வேண்டுமானால் ..... (வந்தேன் / வருகிறேன்)

40. பாண்டவர்..... தாயைப் பணிந்தெழும் பழக்கமுடையவர்.
(ஐவரும்/ ஐவர்)

(05 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

● **41** தொடக்கம் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள கூற்றுக்குப் பொருத்தமான **பழமொழியினை புள்ளிக் கோட்டில்** எழுதுக.

41. யாருமற்ற அநாதரை எல்லாம் வல்ல இறைவனே துணைநின்று காப்பான்.

.....

42. அச்சமின்றி உண்மை கூறுவோன் பலரது வெறுப்புக்கும் ஆளாவான்.

.....

43. மனிதனுக்கு மனநிறைவைப் போன்ற சுகமளிக்கும் செல்வம் வேறொன்றுமில்லை.

.....

44. ஒருவர் தாம் செய்யும் செயலாலேயே தமக்குத் தீங்கை ஏற்படுத்திக் கொள்வார்.

.....

45. தனித்து நிற்காது சகலரும் ஐக்கியப்படின் அதுவே வலிமையுடையது.

.....

(10 புள்ளிகள்)

பகுதி II

1. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் **சரி** எனவும் பிழையாயின் **பிழை** எனவும் வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

பிராந்திய அளவில் சமநிலையான வளர்ச்சி அடைவதற்கு உதவும் வகையில் பிராந்தியங்களுக்கிடையிலான இணைப்பை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் பொறுப்பை நிறைவேற்றும் விருப்பை காண்பிக்கும் வகையில் 2011 இல் போக்குவரத்துத் துறை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. போக்குவரத்துத் துறையிலுள்ள அபிவிருத்தி முக்கியமாக வீதி அபிவிருத்தித் துறையில் காணப்பட்டது. நெடுஞ்சாலை விரைவுப்பாதை, பாலங்கள், வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள வீதிகள் மீதான சிறந்த கவனத்துடன் தற்போதுள்ள வீதிகளைப் புனரமைத்தல் மற்றும் "மக நெகும" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமிய வீதிகளை நிருமாணித்தல் என்பன 2011 இல் தொடர்ந்தன. 2011 நவம்பரில் பொதுமக்களுக்கு திறக்கப்பட்ட தெற்கு விரைவுப் பாதை போக்குவரத்து நுழைவு வழியாகத் திகழ்ந்து பெரியளவிலான சந்தைகளுடன் இணைப்பை ஏற்படுத்தி போக்குவரத்துச் செலவை பெருமளவிற்குக் குறைத்து கூடிய பொருளாதார பெறுகைகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் நாட்டிலுள்ள கூடிய பயணிகள் மற்றும் பொதிகள் போக்குவரத்தினால் ஏற்படும் உயர்ந்த சாலைப் போக்குவரத்து நெரிசலை பார்க்கும்போது பொருளாதார திட்டமிடலில் முன்னெச்சரிக்கையான மதிப்பீடு அவசியமாகவுள்ளது.

(i) பிராந்தியங்களுக்கிடையிலான போக்குவரத்து இணைப்பு பிராந்திய சமநிலை வளர்ச்சிக்கு உதவும். (.....)

(ii) 2011 இல் போக்குவரத்துத்துறையின் அபிவிருத்தி வீதிப் போக்குவரத்துத்துறையில் மட்டும் காணப்பட்டது. (.....)

(iii) பிராந்தியங்களுக்கிடையிலான போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவது தனியார் துறையின் பொறுப்பாகும். (.....)

(iv) நெடுஞ்சாலை என்பது நீண்ட அகன்ற பிரதான வீதியைக் குறிக்கும். (.....)

(v) "மக நெகும" திட்டத்தின் கீழ் கிராமிய வீதிகளை நிருமாணித்தல் 2011 இல் ஆரம்பிக்கப்பட்டது. (.....)

(vi) பொருளாதார பெறுகைகளை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பிலேயே தெற்கு விரைவுப் பாதை அமைக்கப்பட்டது. (.....)

(vii) ஏற்கனவே உள்ள வீதிகளை மீளத்திருத்தியமைத்தலே வீதிப் புனரமைப்பு எனப்படும். (.....)

(viii) பயணிகள் போக்குவரத்தினாலேயே உயர்ந்தளவில் சாலைப் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. (.....)

(24 புள்ளிகள்)

Past Papers Wiki

2. பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் **ஒன்றைத்** தெரிவு செய்து **250** சொற்களுக்கு மேற்படாமல் பகுப்பாய்வுக் கட்டுரை எழுதுக.

(i) காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு ஒப்படைப்பதன் பொருத்தப்பாடு.

(ii) சிறுவர் துஷ்பிரயோகம், மகளிர் துன்புறுத்தல் என்பவற்றை இலங்கையிலிருந்து ஒழித்தல்

(iii) சுகாதாரம், சூழல்பாதுகாப்பு என்பவற்றைக் கவனத்திற் கொள்ளாது கைத்தொழில்மயப்படுத்தப்படுவதால் ஏற்படும் தாக்கங்கள்.

(iv) வர்த்தகமயமாதல், சமூகம் நவீனமயமாதல் என்பவற்றால் அருகிச் செல்லும் பாரம்பரிய விழுமியங்கள்

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

PAST PAPERS WIKI

Past Papers Wiki

(26 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
0272
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library